| O.S.No. 74/2021 | PW2: திரு. மணி த/பெ. திரு. தாண்டவராயன் | 11-02-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் சித்தாத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். வாதி, பிரதிவாதிகள், எனக்கு உறவினர்கள் இல்லை. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன். வாதியின் தந்தை கிருஷ்ணனின் மளிகை கடையில் மளிகை சாமான் வாங்குவதின் அடிப்படையில் கிருஷ்ணனை எனக்கு தெரியும். சித்தாத்தூரிலிருந்து செய்யார் வந்துதான் மளிகை சாமான் வாங்குவோம். வாதியின் தந்தை கிருஷ்ணனை பற்றியும், அவரது குடும்பத்தை பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் நான் வாதியின் கணவர் எனக்கு நன்கு தெரியும் என்பதால் வாதிகளுக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2. எனது பிரமாண வாக்குமூலத்தில் வாதி, 2-ம் பிரதிவாதி குடும்ப ஏற்பாடு செய்த விஷயங்களை என்னிடம் நேரடியாக சொன்னார்கள் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகள் குடும்ப ஏற்பாடு பற்றி என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றாலும், பிரதிவாதிகளுக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வள்ளியம்மாள் சுமதி பெயரில் அசனமாப்பேட்டையில் உள்ள சொத்து சம்மந்தமாக எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். அந்த இடம் மனை ஆகும். அதன் சர்வே எண் ஞாபகமில்லை. அந்த சொத்தின் நீள அகலம் பற்றி துள்ளியமாக ஞாபகமில்லை.

3. மேற்படி சொத்தில் பாதி சொத்தினை சுமதி 2-ம் பிரதிவாதி சுரேஷூக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் நான்

சாட்சி கையெழுத்து போட்டேன், பைங்கினர் சொத்தில் பாதி கொடுக்கிறேன் என்று சொன்னதால் அந்த ஆவணம் எழுதிக்கொடுத்தார். பொதுவாக குடும்ப ஏற்பாடு செய்யும்பட்சத்தில் யார் யாருக்கு என்ன சொத்து என்று குறிப்பிட்டு எழுதுவார்கள் என்றால் சரிதான். அந்த குடும்ப ஏற்பாடு சம்மந்தமாக ஆவணம் எழுதினார்கள், ஆனால் அந்த ஆவணத்தை பதிவு செய்யவில்லை. அந்த ஆவணத்தில் நான் கையெழுத்து போடவில்லை. அந்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் 2-ம் பிரதிவாதி சுரேஷ் எடுத்து வந்து காண்பித்த பின்பு தெரியவந்தது.

4. குடும்ப ஏற்பாடு ஆவணத்தை 2-ம் பிரதிவாதி காண்பித்தார் என்ற விஷயத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. குடும்ப ஏற்பாட்டு ஆவணத்தில் கிருஷ்ணன் மற்றும் அவரது மனைவியின் குடும்ப சொத்துக்களை யார் யார் அடைய வேண்டும் என்று கண்டு எழுதப்பட்டிருந்ததா என்றால் அவ்வாறுதான் எழுதப்பட்டிருந்தது. அந்த குடும்ப ஏற்பாட்டு ஆவணமானது 23.08.2020 அன்று ஏற்பட்டது. நான் சொன்னதுபோல் குடும்ப ஏற்பாட்டு ஆவணம் ஏற்பட்டிருந்தால் நான் அதில் சாட்சி கையொப்பமிட்டிருப்பேன் என்றாலும், அவ்வாறு எந்தவொரு ஆவணமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

5. பைங்கினரில் உள்ள சொத்தினை 1-ம் பிரதிவாதி வாதிக்கு பாதி பாகத்தை எழுதிக்கொடுப்பதாக சொல்லவில்லை என்றாலும், அவ்வாறு சொன்னதாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் அனைத்து விஷயங்களும் சொல்லி எனக்கு தெரியும் என சொல்லியுள்ளதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல என்று சொன்னால் சரியல்ல.

வாதியும் அவரது கணவரும் செய்யாரில் உள்ள சொத்தினை விற்பனை செய்து கொடுக்க சொன்னதால் அதற்கு பவ்வியப்பட்டு வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Ex. P6
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.11 13:35:12 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**